# காலி மா நகர சபை

## காலி மாவட்டம்

------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 30 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 28 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 11 திகதி மா நகர சபையின் நகர ஆணையாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

----------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காலி மா நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் காசோட்டமும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

---------------------------------------------

சபையினால் கடைபிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக் கூற்றுக்களுடன் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-----------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2004 திசெம்பர் 26 சுனாமி பேரழிவினால் சபையின் ஆதனங்களுக்கு ஏற்பட்டிருந்த நட்டங்கள்/ சேதங்களினைக் கணித்து கணக்குகளில் சீராக்கல் மேற்கொள்வதற்கு மீளாய்வாண்டின் போதிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) ரூபா 4,811,101 இற்கான 05 நிலையான வைப்புக்கள் நிதிக் கூற்றுக்களில் இருந்து கைவிடப்பட்டிருந்தன.

(இ) முன்னைய ஆண்டின் போது ஹீன்பெந்தல குப்பை காணியில் சேதனப் பசளை தளத்தின் கூரை நிர்மாணிப்பதற்காக செலுத்தியிருந்த ரூபா 412,394 தொகை முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் மூலதனச் செலவுகள் என காட்டப்படாமல் மீண்டுவரும் செலவுகள் என காட்டப்பட்டிருந்தமையை சரிசெய்யும் போது அப் பெறுமதியினை தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு, மூலதன செலவீட்டிற்கான அரசிறை உதவி தொகை கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான தளபாடங்கள் மற்றும்

பொருத்துக்கள் மற்றும் மூலதன செலவீட்டிற்கான அரசிறை உதவித் தொகைக் கணக்கிற்கு ரூபா 412,394 வீதம் மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 1,289,620 இற்கான நிலையான சொத்துக்கள் மற்றும் ரூபா 23,644 இற்கான நூலக புத்தகங்களை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(உ) நகர அபிவிருத்தி அதிகார சபையின் சேமிப்பு கணக்கு மீதி ரூபா 5,175,928 தொகை எனினும், நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 6,494,449 என குறிப்பிட்டுள்ளமையால் ரூபா 1,318,521 தொகையினால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டு தொடர்பாக கிடைக்க வேண்டிய நீதி மன்றத் தண்டப் பண வருமானம் ரூபா 4,374,429 தொகை எனினும், நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 3,702,861 தொகை என காட்டப்பட்டுள்ளமையால் மீளாய்வாண்டிற்கான வருமானம் மற்றும் கடன்பட்டோர் ரூபா 671,568 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டு தொடர்பாக கிடைக்க வேண்டிய முத்திரை கட்டண வருமானத்தை இனங்கண்டு நிதிக் கூற்றுக்களில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஏ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 788,500 தொகை பெறுமதியான கணனிகள் மற்றும் துணைக் கருவிகள் மீண்டுவரும் செலவுகள் என பதிவு செய்யப்பட்டிருந்தமையால் பொறியும் பொறித் தொகுதி உபகரணக் கணக்கு மற்றும் மூலதன செலவீட்டிற்கான அரசிறை உதவித் தொகை கணக்கு ரூபா 788,500 வீதம் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---

(அ) 04 கணக்கு விடயங்கள் தொடர்பாக கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகள் மற்றும் துணைப் பதிவேடுகளின் பிரகாரம் மீதிகளிடையே ரூபா 5,866,610 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.

(ஆ) 05 கணக்கு விடயங்கள் தொடர்பாக தொடர்புடைய கட்டுப்பாட்டுக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 262,683,396 தொகை எனினும், அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடு சமப்படுத்தியிருக்கவில்லை. இதன் பிரகாரம் கட்டுப்பாட்டுக் கணக்குகளின் மீதியை துணைப் பதிவேட்டுடன் இணக்கஞ் செய்யமுடியாதிருந்தது.

### 1.3.4 தொங்கல் கணக்குகள்

---

1999 ஆண்டு முதல் முன் கொண்டு வரப்பட்டுக் காணப்படும் ரூபா 111,553 இற்கான தொங்கல் கணக்கின் வரவு மீதி மீளாய்வாண்டின் போதும் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 1.3.5 பெற வேண்டிய கணக்குகள்

---

06 வருடங்களை விட பழமை வாய்ந்த முன்கொண்டு வரப்பட்டுள்ள ரூபா 900,178 இற்கான 04 சொத்து மீதிகளை அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

1.3.6 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-----------------------------------------------------------------

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 539,255,296 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு, பட்டோலைகள், கணிப்பீட்டுச் சபை அறிக்கைகள், முறைப்படி பேணப்பட்ட கடன்பட்டோர்/ கடன்கொடுத்தோர் பதிவேடுகள், காலப்பகுப்பாய்வு மற்றும் மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் போன்ற சாட்சிகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

-----------------------------------------------------------------------------------------------

சபையின் 2015 ஆண்டிற்கான பாதீடு 2014 திசெம்பர் 19 திகதி மா நகர சபை அலுவலக சபை மண்டபத்தில் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், மா நகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 188(1)(உஉ) இன் ஏற்பாடுகளுக்கு மாற்றமாக ஹிக்கடுவ ஹோட்டல் ஒன்றில் 2014 திசெம்பர் 20 திகதி நடத்தப்பட்ட இரவு விருந்து உபசாரம் ஒன்றிற்றகாக அந்த ஹோட்டலுக்கு 2015 ஜனவரி 28 திகதி ரூபா 191,432 தொகை ஒன்று சபை நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்ததுடன் அதே போல் அவ் விருந்து உபசாரத்தில் பங்குபற்றியவர்கள் பற்றிய தகவல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் ரூபா 191,432 ஆன செலவு 11476 சர்வதேச மற்றும் ஏனைய வெளிநாட்டு அமைப்புக்களுக்கு ஒப்புதல் பணம் மற்றும் அங்கத்துவப் பணம் செலுத்துவது ஆகிய செலவு குறிப்பீட்டின் மூலம் செலவிடப்பட்டுள்ளது.

2. நிதி மீளாய்வு

-----------------------

2.1 நிதி விளைவு

------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது மா நகர சபையின் மீண்டுவரும் செலவினை குறைந்த வருமானம் ரூபா 40,584,412 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 46,628,525 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

---------------------------------

2.2.1 வீத வரி

-------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 76,529,936 இற்கான வீத வரியினை மா நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவுகள் 252(1)(அ) மற்றும் (ஆ) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

2.2.2 வர்த்தக அனுமதிப்பத்திரம் மற்றும் வாடகை

-----------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 2,825,649 இற்கான வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் ரூபா 21,712,074 இற்கான வாடகை மா நகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரிவுகள் 254(அ)(1) மற்றும் (2) ஏற்பாடுகளின் பிரகாரம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.3 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

---

மாகாண சபையின் பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அலுவலர்களிடமிருந்து 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 3,702,861 இற்கான நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் ரூபா 24,023,511 இற்கான முத்திரைக் கட்டணம் என்பன கிடைக்க வேண்டியிருந்தன.

3. செயற்பாட்டு மீளாய்வு

---

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

---

1988 இன் 74 ஆம் இலக்க (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1975 இன் 01 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் சட்டத்தின் தேவைகளின் பிரகாரம் நகர முதல்வர் உட்பட அனைத்து 17 அங்கத்தவர்களும் 2014 ஆண்டிற்கான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் கூற்று சமர்ப்பித்திருக்கவில்லை. அதே போல் 2013 ஆண்டிற்காக மா நகர முதல்வர் மற்றும் 15 அங்கத்தவர்களினால் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று சமர்ப்பித்திருக்கவில்லை.

3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) காணி ஏல விற்பனை

---

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள 01 ஏக்கர், 01 ரூட், 7.5 பர்சஸ் அளவில் கிதுலம்பிட்டிய பாதையில் 20 இலக்கத்தில் அமைந்துள்ள காணியை கம்பனி ஒன்றினால் ஏல விற்பனை மூலம் விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன் மா நகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 247 உ(1) பிரிவின் பிரகாரம் செலுத்த வேண்டிய நூற்றிற்கு 01 ஆன வரி ஆகிய ரூபா 444,983 தொகை எனினும், சபை ரூபா 386,076 இனை மாத்திரமே அறவிட்டிருந்தது. இதன் பிரகாரம் சபையினால் ரூபா 58,907 இற்கான வரி வருமானம் ஒன்றினை அறவீடு செய்திருக்கவில்லை.

(ஆ) மதிப்பளிக்கப்படாத காசோலைகள்

---

வருமானங்கள் சேகரிக்கும் போது பெற்றுக்கொள்ளப்படும் ரூபா 680,615 தொகை பெறுமதியான 20 காசோலைகள் மதிப்பளிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் இது தொடர்பாக இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 189 மற்றும் 486 இன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. அதே போல் ரூபா 55,473 இற்கான இனங்காணப்படாத மதிப்பளிக்கப்படாத காசோலைகள் தொடர்பாக கவனம் செலுத்தி தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

3.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்

---

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சினால் 2014 நவம்பர் மாதத்தில் 1" கல்வணயிஸ் குழாய்கள் 512 சபைக்கு வழங்கப்பட்டிருந்தது.

(i) சபைக்கு கிடைத்திருந்த 512 கல்வணயிஸ் குழாய்களை பொருட் பதிவேட்டில் பதிவு செய்திருக்கவில்லை.

(ii) 2015 ஏப்ரல் 06 திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் போது 417 குழாய்கள் மாத்திரம் காணப்பட்டது என உறுதிப்படுத்தப்பட்டது. அத்துடன் காணப்படாத குழாய்களின் பெறுமதி ரூபா 105,165 ஆகும்.

4. கணக்களிப் பொறுப்பும் நள்ளாளுமையும்

---------------------------------------------------------------------

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

-------------------------------------

பாதீட்டில் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானத்திடையே முரண்கள் காணப்பட்டதுடன், சில செலவு விடயங்கள் சேமிப்பு காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் பாதீடு பயன்தரு கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

4.2 பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்கள்

-----------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரை 05 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் அனுப்பியிருக்கவில்லை.

5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்